සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

ක්‍රිස්තියානි ධර්මය	I
கிறிஸ்தவம்	I
Christianity	I

43 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

අවිවුරුත්තල්කළ් :

- ✳ **එල්ලා** විනාක්කළුක්කුම් විටෙ එළුතුක.
- ✳ විටෙත්තාළිල් තරප්පට්ටුළ්ළ ඉටත්තිල් උමතු **සුට්ටෙණ්ණෙ** එළුතුක.
- ✳ විටෙත්තාළින් මරුපක්කත්තිල් තරප්පට්ටුළ්ළ අවිවුරුත්තල්කළෙක් කවනමාක වාසිත්තුප් පින්පර්රුක.
- ✳ **1** තොටක්කම් **50** වරෙයුළ්ළ විනාක්කළ් ඔව්වොන්රුක්කුම් (1), (2), (3), (4), (5) එන ඉලක්කමිටප්පට්ට විටෙකළිල් **සරියාන** අල්ලතු **මිකප් පොරුත්තමාන** විටෙයෙත් තෙරින්තෙටුත්තු, **අතනෙක් කුරිත්තු නිර්කුම් ඉලක්කත්තෙත් තරප්පට්ටුළ්ළ අවිවුරුත්තල්කළුක්කු අමෙය විටෙත්තාළිල් පුළ්ළටි (×) ඉටුවතන් මූලම් කාට්ටුක.**

1. පළෙය ඒර්පාටු එබ්‍රේය මර්රුම් අරමේය මොළියිල් එළුතප්පට්ටිරුන්තමෙක්කාන කාරණම් එන්න?
   (1) පබිලෝනියාවිර්කු නාටුකටත්තප්පට්ට පින්නර් මර්රෙය මොළිකළ් තටෙ සෙය්යප්පට්ටමෙ
   (2) කි.මු. 63 ඉල් පලස්තීනා උරෝමප් පිරාන්තියමාක්කප්පට්ටපෝතිලුම් කිරේක්ක මොළි නටෙමුරෙයිලිරුන්තමෙ
   (3) පබිලෝනියාවුක්කු නාටුකටත්තප්පට්ට කාලත්තිල් යූතමක්කළ් අරමේය මොළික්කුප් පුළක්කප්පට්ටිරුන්තමෙ
   (4) එළුත්තාක්කක් කලෙක්කුම් කර්රලුක්කුම් ඉලකුවානමෙ
   (5) කි.මු. 333 ඉල් කිරේක්කප් පේරරසනාන මකා අලෙක්සාණ්ටරාල් පලස්තීනා ආක්කිරමික්කප්පට්ටමෙ

2. ඉයේසුවින් පකිරංක වාළ්විල් ජෙස්රේ සමවෙළියුටන් තොටර්පුටෙය මුක්කිය නිකළ්වු
   (1) නයීම් ඌර් කෙම්පෙණ්ණින් මකනෙ උයිර්ප්පිත්තමෙ
   (2) කානා ඌරිල් තණ්ණීරෙ ඉරසමාක්කියමෙ
   (3) තොළුනෝයාළර්කළ් පත්තුප් පේරෙක් කුණමාක්කියමෙ
   (4) මුතල් සීටර්කළෙත් තේර්න්තුකොණ්ටමෙ
   (5) මුටක්කුවාතක්කාරනෙක් කුණමාක්කියමෙ

3. තනක්කු මුන්නර් ඉරුන්ත අරසර්කළ් පෝර්ච් සෙයර්පාටුකළිල් ඊටුපට නේරිට්ටපෝතුම්, තනතු ආට්සික්කාලත්තෙ අමෙතියාකක් කොණ්ටු නටත්තිය අරසන් යාර්?
   (1) සාවුල් (2) සාලමෝන් (3) තාවීතු
   (4) ජොසියා (5) සෙතෙක්කියා

4. පිර ඉන වළිපාටුකළුටන් තොටර්පුටෙය පලිප්පීටම් උට්පට එල්ලාප් පොරුට්කළුම් කෝයිලිලිරුන්තු වෙළියේර්ර්පට්ටතු
   (1) පාරසීකර් කාලත්තිලාකුම්.
   (2) පෙරිය ඒරෝතු අරසනින් කාලත්තිලාකුම්.
   (3) උරෝමෙයර් කාලත්තිලාකුම්.
   (4) තාවීතු අරසනින් කාලත්තිලාකුම්.
   (5) කිරේක්කර් කාලත්තිලාකුම්.

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

5. தொடக்கத்தில் மனிதனும் விலங்குகளும், மாமிசம் தவிர்த்து உணவு உட்கொண்டதனால் வெளிப்படுத்தப்படுவது
(1) படைப்பின் சமாதானத் தன்மையாகும்.
(2) இறைவனின் விருப்பமாகும்.
(3) ஆதிப் பெற்றோரின் விருப்பமாகும்.
(4) படைப்பின் ஆதிக்கமாகும்.
(5) குரு மரபாகும்.

6. விஞ்ஞானத்தின் குறிக்கோளுக்கும் மறையின் நோக்கத்திற்கும் இடையில் வேறுபாடு நிலவுகிறது. 2 திமோத்தி 3:15 இன்படி, மறையின் பிரதான நோக்கமாவது
(1) உலகை முன்னேற்றுவதாகும்.
(2) மனிதனின் மீட்பாகும்.
(3) சகவாழ்வை ஏற்படுத்துதலாகும்.
(4) அயலார் மீதான அன்பு ஆகும்.
(5) இறையியல் உண்மையை விளக்குவதாகும்.

7. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைத் தொகுக்கும்போது பங்களிப்புச் செய்த இரு மரபுகளுமாவன
(1) யாவே மற்றும் எலோகிம்
(2) இணைச்சட்டம் மற்றும் குருக்கள்
(3) யாவே மற்றும் இணைச்சட்டம்
(4) யாவே மற்றும் குருக்கள்
(5) எலோகிம் மற்றும் குருக்கள்

8. தொடக்க நூல் 2:19 இன்படி ஆதாம் சகல மிருகங்களுக்கும் பெயரிட்டதன் மூலம் கருதப்படுவது, மனிதனுக்கு அவற்றின் மீதுள்ள
(1) அதிகாரமாகும். (2) கருணையாகும்.
(3) உரிமையாகும். (4) மதிப்பாகும்.
(5) பொறுப்பாகும்.

9. யாவே மரபின்படி பெருவெள்ளம் ஏற்படக் காரணம் பெருமழை ஆயினும், குருக்கள் மரபின்படி பெருவெள்ளம் ஏற்படக் காரணம் யாது?
(1) உலகம் முழுதும் பரவியுள்ள மனிதனின் துட்டத்தனம்
(2) சமுத்திரத்தின் நீர் மட்டம் மேலெழுந்தமை
(3) பேராளத்தின் ஊற்றுக்களினால் பெருவெள்ளம் ஏற்பட்டமை
(4) பாவத்தினால் மாசடைந்த அனைத்துப் படைப்புகளையும் அழிக்கத் தீர்மானித்தமை
(5) இயற்கையை அழித்ததன் காரணமாக ஏற்பட்ட சூழல் பிரச்சினை

10. இறைவன் தம் சுய விருப்பத்துடன் தேர்ந்துகொண்ட, மீட்பின் வரலாற்றுடன் தொடர்புடைய முதல் நபர் யார்?
(1) நோவா (2) ஆபிரகாம் (3) ஈசாக்
(4) யாக்கோபு (5) மோசே

11. பின்வரும் பெருந்துன்பங்களைக் கருதுக.
A - தவளைகள் பெருகுதல்
B - கொசுக்களின் தொல்லை
C - கால்நடைகளின் சாவு
D - கொப்புளங்கள் வெடித்தல்
E - கல்மழை
F - வெட்டுக்கிளிகளின் தொல்லை
மேற்குறித்தவற்றுள் மோசே பார்வோன் மன்னனைச் சந்தித்து எச்சரித்து, எதிர்காலத்தில் நடக்கப்போவதைக் குறிப்பிட்டு, அனுப்பப்பட்ட பெருந்துன்பங்கள் யாவை?
(1) *A, B, C* ஆகியன மட்டும் (2) *A, C, F* ஆகியன மட்டும் (3) *B, D, E* ஆகியன மட்டும்
(4) *C, D, F* ஆகியன மட்டும் (5) *D, E, F* ஆகியன மட்டும்

12. இருசாரார் தமக்கிடையே செய்துகொள்ளும் ஒப்பந்தம் 'உடன்படிக்கை' எனப்படும். அதற்கான எபிரேயச் சொல்
(1) செகுல்லா (2) கோய் கடொஷ் (3) கொகேன்
(4) பெரித் (5) மசாடெக்ஸ்

[பக். 3 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

13. அசீரிய பேரரசுக்கு எதிராகப் போரிட்ட தமஸ்கு அரசனின் பெயர் யாது?
(1) ஆகாஸ் (2) ரேசின் (3) பெகா
(4) சனாகெரிப் (5) சவுல்

14. யூதாவின் மன்னர்களான யோத்தாம், ஆகாசு, எசேக்கியா ஆகிய மூவரினதும் ஆட்சிக்காலங்களுடன் தொடர்புடைய இறைவாக்கினர் யார்?
(1) எசாயா (2) எரேமியா (3) ஓசேயா
(4) எசேக்கியேல் (5) செதெக்கியா

15. நிர்வாகத் துறைகளை இலக்காகக் கொண்டு, பிரபுக்கள் வகுப்பினரின் இளைஞர்களைப் பயிற்றுவிப்பதற்கான ஞானத்தின் பிரிவு,
(1) ஆன்மீக ஞானம்
(2) அன்றாட வாழ்வு பற்றிய ஞானம்
(3) செய்முறை ஞானம்
(4) அரச சபை ஞானம்
(5) குடும்பம் மற்றும் கோத்திர ஞானம்

16. திருப்பலியில் இறைவார்த்தைக்குப் பதிலுரையாகப் பாடுவதற்குப் பயன்படுத்தப்படும் திருவிவிலியத்தின் நூல் எது?
(1) நீதிமொழிகள் நூல் (2) சபை உரையாளர் (3) திருப்பாடல்கள் நூல்
(4) சாலமோனின் ஞானம் நூல் (5) இனிமைமிகு பாடல் நூல்

17. கலிலேயா மற்றும் பெரேயா பிரதேசங்களுக்குப் பொறுப்பாகக் கலிலேயாவின் ஆளுநராகச் செயற்பட்டவர்
(1) பொத்தியு பிலாத்து (2) யூலியஸ் சீசர் (3) பிலிப் த டேற்றாக்
(4) பெரிய ஏரோது (5) ஏரோது அந்திபாஸ்

18. யூத சமூகத்தில் பெண்களுக்கு உரிய சமூக உரிமைகள் மேற்கொண்டுவரப்பட்ட வேண்டியதன் தேவையைப் பின்னணியாகக் கொண்டு, "மரியாவோ நல்ல பங்கைத் தேர்தெடுத்துக்கொண்டாள்" என இயேசு கூறியது
(1) அவளது செயலைப் பாராட்டுவதற்காகும்.
(2) மார்த்தாவின் செயலைக் குறைவாகக் கணிப்பிடுவதற்காகும்.
(3) அவள் இலாசரின் தங்கையாக இருந்தமையினாலாகும்.
(4) தமது சீடர்களை அவள் உபசரித்தமையினாலாகும்.
(5) அவளுடைய சகோதரி அவருக்குப் பணிவிடை செய்தமையினாலாகும்.

19. பின்வரும் விடயங்களைக் கருதுக.
A - கற்பித்தல்
B - பலி ஒப்புக்கொடுத்தல்
C - செபித்தல்
D - குணப்படுத்தல்களைச் செய்தல்
E - தியானித்தல்
F - சடங்கு முறைகளை நிறைவேற்றுதல்
மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களில் செபக்கூடம் அல்லது சினகொக்கில் நிறைவேற்றப்பட்ட செயல்களாவன
(1) *A, B, C* ஆகியன மட்டும் (2) *A, B, D* ஆகியன மட்டும் (3) *A, C, E* ஆகியன மட்டும்
(4) *B, D, F* ஆகியன மட்டும் (5) *D, E, F* ஆகியன மட்டும்

20. மனுவுரு எடுத்த இயேசு கிறிஸ்து யூத மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த மெசியா என்பதை வெளிப்படுத்துபவர் யார்?
(1) புனித பவுல் (2) புனித லூக்கா (3) புனித மாற்கு
(4) புனித மத்தேயு (5) புனித யோவான்

21. புனித பவுலின் மூன்றாவது தூதுரைப் பயணத்தில் இடம்பெற்ற ஒரு விசேட நிகழ்வு ஆவது
(1) கால்களில் விலங்கிட்டு சிறைக் காவலில் விடப்பட்டமை
(2) "மனித கைகளால் செய்தவை தெய்வங்கள் அல்ல" எனப் புனித பவுல் போதித்தமை
(3) புனித பவுல் ஒரு காட்சியைக் கண்டமை
(4) சிறைக்காவலர் இயேசுவை விசுவாசித்தமை
(5) யூத செபக்கூடங்களில் நற்செய்தியைப் போதிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தமை

[பக். 4 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

22. புனித பவுல் கிறிஸ்துவினாலேயே அனுப்பப்பட்ட திருத்தூதர் என உறுதிசெய்வதனை நோக்கமாகக் கொண்ட மடல் யாது?
(1) எபேசியர்
(2) கலாத்தியர்
(3) உரோமையர்
(4) இரண்டாவது கொரிந்தியர்
(5) முதலாவது தெசலோனிக்கர்

23. புனித மத்தேயு இயேசுவை அறிமுகப்படுத்துவது முழு உலகிற்கும் இறை அரசை வெளிப்படுத்திய,
(1) அமைதியின் அரசராகவாகும்.
(2) நீதிமானாகவாகும்.
(3) திவ்விய வைத்தியராகவாகும்.
(4) சதாகாலத் தந்தையாகவாகும்.
(5) ஆசிரியராகவாகும்.

24. இறுதியில் தீயோரிடம் இருந்து நல்லோரைப் பிரித்து, அவரவர்க்குத் தகுதியான தீர்ப்பு வழங்கப்படும் என்பதைக் கற்பிப்பது
(1) விதைப்பவன் பற்றிய உவமையாகும்.
(2) கடுகுவிதை பற்றிய உவமையாகும்.
(3) வலை பற்றிய உவமையாகும்.
(4) புதையல் பற்றிய உவமையாகும்.
(5) முத்துக்கள் பற்றிய உவமையாகும்.

25. எசாயா இறைவாக்கினரின்படி அனைவரும் மண்டியிடும் உன்னதமான பெயர்
(1) மீட்பர் (2) விடுதலை அளிப்பவர்
(3) குணமளிப்பவர் (4) வைத்தியர்
(5) இயேசுவே ஆண்டவர்

26. திருமுழுக்கின்போது 'கிறிஸ்மா தைலத்தால்' அபிஷேகம் செய்யப்படுவதனால் அளிக்கப்படும் பொறுப்புக்கள்
(1) அரசன் / இறைவாக்கு / பணியாளன்
(2) குருத்துவ / இறைவாக்கு / அரசன்
(3) குருத்துவ / மேய்ப்பு / அரசன்
(4) குருத்துவ / இறைவாக்கு / பணியாளன்
(5) இறைவாக்கு / மேய்ப்பு / அரசன்

27. இயேசு கிறிஸ்து இறைவார்த்தை போன்றே, இறைவார்த்தையை வெளிப்படுத்துபவருமாக இருக்கிறார் எனக் குறிப்பிடப்படுவது
(1) சீனாய் உடன்படிக்கையிலாகும்.
(2) கல்வாரி உடன்படிக்கையிலாகும்.
(3) நோவாவுடனான உடன்படிக்கையிலாகும்.
(4) புதிய ஏற்பாட்டிலாகும்.
(5) பழைய ஏற்பாட்டிலாகும்.

28. தேவநற்கருணையைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர், 'சரீர ஆயத்தம்' என்பதனால் கருதப்படுவது யாது?
(1) குளித்து, தூய்மையாக வருதல்
(2) நல்லதொரு ஒப்புரவு செய்திருத்தல்
(3) குறைந்தபட்சம் ஒரு மணித்தியாலமாவது எவ்வகை உணவையும் உட்கொள்ளாது இருத்தல்
(4) தூய்மையான உடைகளை அணிந்திருத்தல்
(5) கண்ணியமான, ஒழுக்கமான முறையில் உடை அணிந்திருத்தல்

29. சுரங்கங்களில் வேலைகளுக்கு குருக்கள், ஆயர்கள், திருத்தந்தையர்கள் ஆகியோர் எப்பேரரசனின் காலத்தில் அடிமைகளாக நாடுகடத்தப்பட்டனர்?
(1) தேசியுஸின் காலத்திலாகும்.
(2) திராஜனின் காலத்திலாகும்.
(3) மாக்சிமியனின் காலத்திலாகும்.
(4) மாற்குஸ் அவுரேலியனின் காலத்திலாகும்.
(5) செப்திமுஸ் சேவருஸின் காலத்திலாகும்.

[பக். 5 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

30. அப்போஸ்தலிக்க தந்தையர்கள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ள தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) நாசியாவின் புனித கிரகோரியார் / புனித ஹர்மஸ் / புனித அத்தனாசியார்
(2) புனித அப்புறோஸ் / உரோமையில் புனித கிளமென்ட் / புனித பப்பியாஸ்
(3) புனித இஞ்ஞாசியார் / நசியாவின் புனித கிரகோரியார் / புனித ஹர்மஸ்
(4) புனித பொலிக்கப் / புனித அகுஸ்தினார் / பப்பியஸ்
(5) உரோமையின் புனித கிளமென்ட் / புனித பொலிக்கப் / புனித ஹர்மஸ்

31. இரண்டாம் நூற்றாண்டின் அதிபிரசித்தமான சபைத்தந்தையராக விளங்கியவர் யார்?
(1) புனித அத்தனாசியார் (2) புனித சிறில் (3) புனித ஜெரோம்
(4) புனித ஜஸ்டின் (5) புனித அகுஸ்தினார்

32. தூயவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதுவதற்கு முன்னோடியாக விளங்கிய புனித ஜெரோம் எழுதிய, பிரசித்தி பெற்ற நூல் எது?
(1) அப்போலோஜியா (2) விசேட நபர்களின் வாழ்க்கை வரலாறு
(3) திரியோவுடன் உரையாடல் (4) இறைநகர்
(5) பாவசங்கீர்த்தனம்

33. மெய்யியல், இறையியல், தர்க்கவியல் ஆகிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தெர்த்துல்லியன் நூல்களை எழுதியிருப்பது
(1) திருச்சபையின் ஆடம்பர வாழ்க்கை முறையைக் கண்டிப்பதற்காகும்.
(2) கிறிஸ்தவ மறையை விளக்கிக் கூறுவதற்காகும்.
(3) மறையியல் கற்பித்தலின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவதற்காகும்.
(4) திருச்சபையின் ஆன்மீகச் சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்காகும்.
(5) சடங்கு முறைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்காகும்.

34. 'பேதகங்கள்' என வரையறுக்கப்படுவது
(1) உலக மறை கற்பித்தலுக்கு எதிர்மாறான கற்பித்தலாகும்.
(2) இயற்கை நியதிகளுக்கு எதிரான மனித நடத்தைகளாகும்.
(3) திருச்சபையின் படிப்பினைகளுக்கு எதிரான போதனைகளாகும்.
(4) சமுதாயத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமூக விழுமியங்களுக்கு எதிரான போதனைகளாகும்.
(5) பழைய ஏற்பாட்டுக்கு மட்டும் எதிரான போதனைகளாகும்.

35. எபேசு, நிசாயா, கல்சிதோன், கொன்ஸ்தாந்திநோபிள் ஆகிய திருச்சங்கங்கள் நடைபெற்ற வருடங்களை முறையே கொண்ட தெரிவு யாது?

A - கி.பி. 325
B - கி.பி. 381
C - கி.பி. 431
D - கி.பி. 451

(1) *A, B, C, D* (2) *A, C, B, D*
(3) *B, C, D, A* (4) *B, A, D, C*
(5) *C, A, D, B*

36. கொன்ஸ்தாந்திநோபிள் திருச்சங்கத்தின் வேதபேதகக் கருத்துக்களை விலக்கிவிட்டுத் திருச்சபையின் மறை உண்மைகளை உறுதிப்படுத்துவதற்காகப் பங்கெடுத்த திருத்தந்தையர்களை மட்டும் கொண்ட தெரிவு யாது?
(1) புனித பசில், நாசியாவின் புனித கிரகோரியார், நிசா புனித கிரகோரி
(2) புனித பசில், புனித சிறில், புனித அத்தனாசியார்
(3) நாசியாவின் புனித கிரகோரியார், புனித சிறில், புனித பிளேவியன்
(4) நிசா புனித கிரகோரி, புனித பிளேவியன், புனித பசில்
(5) புனித பசில், புனித சிறில், நிசா புனித கிரகோரி

[பக். 6 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

37. மனிதனுக்குரிய தாயகத்தை எவ்வித எதிரியும் கைப்பற்ற முடியாதெனக் குறிப்பிடும் புனித அகுஸ்தினாரின் நூல் எது?
(1) இறைநகர் (2) நிறைவாழ்வின் வழி (3) உள்ளக மாளிகை
(4) ஆத்மாவின் இருண்ட இரவு (5) அன்பின் அணையாச் சுவாலை

38. ஸ்லாவிக் கோத்திர மக்களுக்கு புனித சிறில் அறிமுகப்படுத்திய புதிய அரிச்சுவடி, மொழி என்பன எதனைக் கட்டியெழுப்ப உதவியாக அமைந்தன?
(1) மரபை (2) கலாசாரத்தை (3) சடங்கு முறைகளை
(4) மறையை (5) பரம்பரையை

39. மேன்மைதங்கிய திருத்தந்தை இரண்டாவது ஊர்பன் அவர்களின் தலைமையில் முதலாவது சிலுவைப்போர் உருவாகக் காரணமாய் அமைந்தது யாது?
(1) புதிய மறுசீரமைப்பை உருவாக்குதல்
(2) வத்திக்கானின் ஆட்சி அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்ளல்
(3) புனித பூமியை மீண்டும் பெற்றுக்கொள்ளல்
(4) பேராலயத்திற்கு அருகாமையிலுள்ள கட்டடங்களைப் பாதுகாத்துக் கொள்ளல்
(5) இலௌகிக சுகபோகங்களைச் சேகரித்துக் கொள்ளல்

40. மாட்டின் லூதரின் பிரதான படிப்பினையாவது
(1) வாழ்வின் இறுதியில் மீட்பானது, பிறர் சினேகச் செயல்களினால் மட்டுமே கிடைக்கும் என்பதாகும்.
(2) சட்டப்படியல்லாத அனைத்தையும் நீக்கிவிட வேண்டும் என்பதாகும்.
(3) மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்காகச் செயற்பட வேண்டும் என்பதாகும்.
(4) கிறிஸ்தவ சபை எல்லா விசுவாசிகளினதும் பங்களிப்பாக இருக்க வேண்டும் என்பதாகும்.
(5) திருச்சபைக்குள் இருந்துகொண்டே சீர்த்திருத்தவாத இயக்கத்தை உருவாக்க வேண்டும் என்பதாகும்.

41. மேலைத்தேய நாட்டிலிருந்து வந்த போர்த்துக்கேயர் 'பத்றோ ஆடோ' திட்டத்தின் மூலம் எதற்காகத் தூண்டப்பட்டனர்?
(1) சமூக நலனுக்காக
(2) சுகாதார வசதிகளைக் கட்டியெழுப்புவதற்காக
(3) பாடசாலைகளை அமைப்பதற்காக
(4) நாடுகளையும் அரசுகளையும் அடிமைப்படுத்திக் கொள்வதற்காக
(5) மறையைப் பரப்புவதற்காக

42. பரராசசேகர மன்னனின் மகன் இந்நாட்டில் திருமுழுக்குப் பெற்ற பின்னர் கோவா நகரிற்குச் சென்று குருத்துவம் பெற்றது
(1) பிரான்சிஸ்கன் சபையிலாகும்.
(2) அகுஸ்தினார் சபையிலாகும்.
(3) இயேசு சபையிலாகும்.
(4) தொமினிக்கன் சபையிலாகும்.
(5) அமலமரித் தியாகிகள் சபையிலாகும்.

43. மேல்நாட்டு மருத்துவம் ஆரம்பிக்கப்பட்டதுடன் வைத்தியசாலைகளும் நிறுவப்பட்டது
(1) போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்னரான காலத்திலாகும்.
(2) போர்த்துக்கேயர் காலத்திலாகும்.
(3) ஒல்லாந்தர் காலத்திலாகும்.
(4) பிரித்தானியர் காலத்திலாகும்.
(5) சுதந்திர காலத்திலாகும்.

44. ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற முக்கிய அம்சம்
(1) 'மக்னாகாட்டா' சட்டம் அமுல்படுத்தப்பட்டமை
(2) மேலைத்தேய மொழிகளும் கல்வி முறைகளும் இந்நாட்டில் வளர்ச்சிபெற்றமை
(3) திருமணத்தின் நிலையானதன்மை உறுதிப்படுத்தப்பட்டமை
(4) கல்வி செயற்பாடுகள் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டமை
(5) பிறப்பு, இறப்புப் பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டமை

[பக். 7 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

45. அண்ணாவியார், சக்கிருஷ்டியான், மூப்பர் ஆகிய முதல் பொதுநிலைத் தலைவர்களை நியமித்து, அவர்களின் சேவைகளைக் குழுக்கள் பெற்றுக் கொள்ள வழிசெய்தவர் யார்?
(1) அருட்பணி கொன்சால்வேஸ் அடிகளார்
(2) அருட்பணி சீயோன் த கொயிம்பிறோ அடிகளார்
(3) அருட்பணி ஜோன் த விலா கொந்தே அடிகளார்
(4) அருட்பணி கிளமென்டா மிராண்டா அடிகளார்
(5) அருட்பணி ஜோசப் வாஸ் அடிகளார்

46. இங்கிலாந்து திருச்சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தி கி.பி. 1805 இல் இந்நாட்டிற்கு வருகைதந்த முதலாவது மறைத்தூதுக் குழுவினர் யாவர்?
(1) லண்டன் மறைத்தூதுக் குழுவினர்
(2) பப்ரிஸ்ட் மறைத்தூதுக் குழுவினர்
(3) வெஸ்லியன் மறைத்தூதுக் குழுவினர்
(4) அமெரிக்க மறைத்தூதுக் குழுவினர்
(5) இரட்சணியசேனையின் மறைத்தூதுக் குழுவினர்

47. எந்த சமய அமைப்புக்களும் பாடசாலைகளை ஆரம்பித்து நடாத்துவதற்கு இடமளிக்கப்படவேண்டும் என ஆலோசனை வழங்கியவர் யார்?
(1) அருட்பணி ஜோசப் சமேரியா அடிகளார்
(2) அருட்பணி தொன் பீட்டர் அடிகளார்
(3) அருட்பணி கிறிஸ்தோபர் பொன்ஜின் அடிகளார்
(4) அருட்பணி பீட்டர் பிள்ளை அடிகளார்
(5) அருட்பணி ஜோசப் மேரி பிராவி அடிகளார்

48. மனிதனின் மாண்பு தங்கியிருப்பது, அவனுக்கே உரிய சிறப்பான பண்பாகிய
(1) அறிவின் மீதாகும். (2) ஞானத்தின் மீதாகும். (3) தகைமை மீதாகும்.
(4) மனச்சான்றின் மீதாகும். (5) பதவியின் மீதாகும்.

49. தற்போது மனிதனுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ள கடுமையான இயற்கை அனர்த்தங்களுக்குக் காரணம்
(1) சூழல் அழிக்கப்படுதல்
(2) உரிமைகள் மீறப்படுதல்
(3) அபிவிருத்திக் கொள்கைகள் மீறப்படுதல்
(4) வறுமை மட்டம் அதிகரித்துச் செல்லல்
(5) தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்துதல்

50. காண்டற்பெரியில் பேராயரான மேதகு மைக்கல் ரம்சி, திருத்தந்தை ஆறாவது சின்னப்பர் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்ட ஆணைக்குழு எது?
(1) உலகளாவிய சபைகளின் ஒற்றுமையை வளர்க்கும் ஆணைக்குழு
(2) கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிப்பை வளர்க்கும் ஆணைக்குழு
(3) ஸ்கொலாகல் ஆணைக்குழு
(4) நம்பிக்கையை வளர்க்கும் ஆணைக்குழு
(5) இங்கிலாந்தின் உரோமன் கத்தோலிக்க சர்வதேச ஆணைக்குழு

* * *

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

ක්‍රිස්තියානි ධර්මය கிறிஸ்தவம் Christianity	II II II	43 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

அறிவுறுத்தல்கள் :

* பகுதி I இலிருந்து **இரண்டு** வினாக்களையும் **பகுதி II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

பகுதி I

1. (i) பின்தொடர்ந்த பார்வோனின் படைகள் முன்னிலையில் துன்புற்ற இஸ்ரேயல் மக்கள் யாரிடம் முறையிட்டனர்? (02 புள்ளிகள்)

(ii) இறைவன் இஸ்ரயேல் மக்களுடன் பிரசன்னமாய் இருந்து வழிகாட்டிய **இரு** அடையாளங்களையும் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) பாலைநிலப் பயணத்தின்போது இஸ்ரேயல் மக்கள் முறுமுறுத்த முக்கிய சந்தர்ப்பங்கள் **மூன்றினை** விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) இறைவன் பழைய ஏற்பாட்டில் தேர்ந்து கொண்ட மக்களுக்குத் தம்மை வெளிப்படுத்தியதிலிருந்து உமக்குக் கிடைக்கும் அனுபவத்தின் ஊடாக சமுதாயத்திற்கு ஆற்றும் பணிகள் **நான்கினை** விளக்குக. (08 புள்ளிகள்)

2. (i) எபிரேய மொழியில் இறைவாக்கினர் 'நபி' என அழைக்கப்பட்டனர். அச்சொல்லின் கருத்துக்கள் **இரண்டு** தருக. (02 புள்ளிகள்)

(ii) எழுத்துவடிவம் பெறாத இறைவாக்கினர்களின் தூதுப் பணியின் விசேட பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) இறைவாக்கினர் நாத்தான் தாவீது அரசனுக்கு முன்வைத்த மெசியா பற்றிய முக்கிய கருத்துக்கள் **மூன்றினை** விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) திருமுழுக்கு அழைப்பில் நீர் பெற்ற இறைவாக்குப் பணியினை இன்றைய சமுதாயத்தில் செயற்படுத்தும் விதத்தினை **நான்கு** விடயங்களைக் கொண்டு விளக்குக. (08 புள்ளிகள்)

3. (i) இலங்கைத் திரு-அவை வரலாற்றை ஏன் கற்க வேண்டும் என்பதற்கான காரணங்கள் **இரண்டினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) கி.பி. 1505 இற்கு முன்னர் (போர்த்துக்கேயர் வருகைக்கு முன்னர்) இலங்கையில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கான சான்றுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) 7ஆம் புவனேகபாகு மன்னன் தனது இராச்சியத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்காகத் தனது அரச தூதுவரை போர்த்துக்கலின் லிஸ்பன் நகருக்கு அனுப்பி, முன்வைத்த கோரிக்கைகள் **மூன்றினை** விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) ஒறத்தோரியன் சபை மறைத் தூதுவர்களால் நிறைவேற்றப்பட்ட பணிகள் **நான்கினைக்** குறிப்பிட்டு, அதன்படி தற்போதைய மறைத்தூதுரைப் பணியில் ஈடுபடுவோர் செயற்பட வேண்டிய விதத்தை **நான்கு** காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (08 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

பகுதி II

4. (i) யோசியா அரசனைப் பற்றிய முக்கிய விடயங்கள் **ஐந்தினைக்** குறிப்பிட்டு, அவற்றை விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) ஒன்றுபட்ட தேசத்தைக் கட்டியெழுப்புவதில் இளம் வயதினராக இன, மத ஒருமைப்பாட்டிற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் **ஐந்தினை** விவரிக்குக. (10 புள்ளிகள்)

5. (i) யோவான் நற்செய்தியின் பிரதான நோக்கத்தினைக் குறிப்பிட்டு, இந்நற்செய்தி தொடர்பான மூலங்கள் **நான்கினை** விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) நற்செய்தி எழுத்தாளர்கள் 'இயேசு என்னும் நற்செய்தியைப்' பரப்புவதற்காக எடுத்த முயற்சிகளை, நம்பிக்கை இழந்த சமூதாயத்தில் இன்று நீர் எவ்வாறு செயற்படுத்துவீர் என்பதை **ஐந்து** விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (10 புள்ளிகள்)

6. (i) மலைப்பொழிவின் நோக்கங்கள் **ஐந்தையும்** விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) மனித மனங்களில் காணப்படும் தீய பண்புகளைப் போன்றே கொடூர இருள்மயம் பரவிக் காணப்படும் சமுதாயமொன்றில் நீர் மண்ணுலகிற்கு உப்பாக, உலகிற்கு ஒளியாகச் செயற்படும் விதத்தை **ஐந்து** விடயங்களைக் கொண்டு விவரிக்குக. (10 புள்ளிகள்)

7. (i) கி.பி. 313 இல் வெளியிடப்பட்ட சாசனத்தின் வழியாகக் கிடைத்த சலுகைகள் **ஐந்தினை** விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) இன்றைய கிறிஸ்தவர்களாக வாழ்வியற் சவால்களுக்கு முகம்கொடுக்கும்போது இறைவன் மீதான நம்பிக்கையை உறுதியுடையதாக அமைத்துக்கொள்வதற்கு மேற்கொள்ளக்கூடிய செயல்கள் **ஐந்தினை** விவரிக்குக. (10 புள்ளிகள்)

8. (i) மானிட அபிவிருத்திக்கான கிறிஸ்தவரின் பங்களிப்புப் பற்றி திருவிவிலியம், திருச்சபைப் படிப்பினை ஆகியவற்றிலிருந்து **ஐந்து** விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) யுத்த அக்கினி பற்றி எரியும் இன்றைய உலகில் உலக சமாதானத்தை உருவாக்குவதற்கு கிறிஸ்தவராக நீர் முன்வைக்கும் ஆலோசனைகள் **ஐந்தினை** விளக்குக. (10 புள்ளிகள்)

* * *

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/